# பள்ளிகளில் மாணவர் பாதுகாப்பு மற்றும் தனிக்கவனம்

**அறிமுகம்:**

ஒவ்வொரு குழந்தைக்கும், பாதுகாப்பான, வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு உகந்த சூழலில் வாழ்வதற்கும், கல்வி பெறுவதற்கும் உரிமை உள்ளது. குழந்தைகளின் பாதுகாப்பு என்பது உள்கட்டமைப்பு மற்றும் உடல் பாதுகாப்புடன் மட்டும் நின்றுவிடாது. தற்போது தேசிய அளவில் உடல் ரீதியான தண்டனையைத் தாண்டி கொடிமைபடுத்துதல், உடல் ரீதியான வன்முறை, பாலியல், உளவியல் மற்றும் உணர்ச்சி ரீதியான வன்முறை போன்றவற்றால் குழந்தைகளின் பாதுகாப்பு என்பது மிகவும் சிக்கலானதாக மாறியுள்ளது.

**நோக்கங்கள்:**

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியானது, குழந்தைகள், வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு உகந்த சூழலில் வாழ்வதற்கும் கல்வி பெறுவதற்கும் உகந்த சூழலை வழங்க முன்வந்துள்ளது.

அனைத்து வகை ஆசிரியர்களும் தங்கள் பள்ளி மாணவர்களுக்கு முதல் நிலை வழிகாட்டுபவர்களாக செயல்படுதல் வேண்டும். மேலும், ஒவ்வொரு பள்ளியிலும் அவசரகால உதவி எண், அந்தந்த மாவட்ட அதிகாரிகளின் விவரங்கள் அடங்கிய உறுதிமொழி பலகையை வைப்பது மிகவும் அவசியமாகும்.

மாணவர்களுக்கு வழங்கப்படவேண்டிய போக்சோ சட்டம் பற்றிய விழிப்புணர்வு, பள்ளி பாதுகாப்பு வழிகாட்டுதல்கள், அவசரகால உதவி எண்கள் மற்றும் பள்ளிகளில் புகார் பெட்டி வைப்பதன் அவசியம் போன்றவை பற்றி ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்க வேண்டியதும் மிகவும் அவசியமாகும்.

இதற்காக பள்ளி அளவில் குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு திட்டமானது 2019–20 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு அந்த ஆண்டில் அனைத்து ஆசிரியர்களுக்கும் பயிற்சியும் அதுசார்ந்த கட்டகமும் வழங்கப்பட்டது, மேலும் அனைத்து பள்ளிகளிலும் மாணவர்களுக்குத் தேவையான குழந்தைகளுக்கான அவசரகால உதவி எண்கள், அந்தந்த மாவட்ட அதிகாரிகளின் விவரங்கள் அடங்கிய உறுதிமொழி பலகையும் வைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

**திட்டம் செயல்படுத்தப்படும் முறைகள்:**

இச்செயல்பாட்டிற்கு நிதியானது 2 தலைப்புகளின் கீழ் வழங்கப்படுகிறது.

1. பள்ளி பாதுகாப்பு சார்ந்து பள்ளிகளுக்கான நிதி.
2. பள்ளி பாதுகாப்பு சார்ந்து ஆசிரியர்களுக்கான பயிற்சி நிதி

கோவிட் – 19 கிருமியின் காரணமாக நோய்த் தொற்று பரவும் அசாதாரணமான தற்போதைய சூழலில், அனைத்து அரசுப் பள்ளிகளிலும் பயிலும் மாணவர்கள் எவ்வித பயமும் இன்றி ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு உணர்வுடன் கல்வி கற்கும் சூழலை பள்ளிகளில் உருவாக்குவது மிகவும் அவசியமானதாகும். எனவே பள்ளிகளுக்கான தலைப்பில் வழங்கப்பட்டுள்ள நிதியானது கிருமிநாசினி கொண்டு பள்ளிகளையும் வகுப்பறைகளையும் தூய்மைபடுத்தும் பணிக்கு பயன்படுத்தப்படும்.

ஆசிரியர்களுக்கான பயிற்சி நிதியை பயன்படுத்தி அனைத்து அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கும் பள்ளி அளவில் குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு சார்ந்து கோவிட் பெறுந்தொற்று பற்றிய விழிப்புணர்வு, பாலின சமன்பாடு மற்றும் குழந்தைகளின் உடல்நலன், பாதுகாப்பு சார்ந்து இணையதள வழியான பயிற்சியும் அதுசார்ந்த கட்டகமும் வழங்கப்படும். மேலும் மீதமுள்ள நிதியைக் கொண்டு பள்ளிகள், வகுப்பறைகள் மற்றும் மாணவர்கள் அதிகம் பயன்படுத்தும் கழிவறைகள் பொன்றவற்றைத் தூய்மைப்படுத்தும் பணிகளுக்குத் தேவையான கிருமிநாசினி, கைகளை சுத்தப்படுத்த தேவையான சோப்பு எண்ணெய், முகக்கவசங்கள் போன்றவற்றை வாங்குவதற்கும் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

**எதிர்பார்க்கப்படும் திட்ட விளைவுகள்:**

ஒட்டுமொத்த ஆசிரியர் சமுதாயமும் கோவிட் பெறுந்தொற்று பற்றிய விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பு வழிமுறைகளைப் பற்றி அறிந்துகொள்வர்.

பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வாயிலாக ஒட்டுமொத்த மாணவர் சமுதாயமும் கோவிட் பெறுந்தொற்று பற்றிய விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பு வழிமுறைகளைப் பற்றி அறிந்துகொள்வர்.

இதனால் கோவிட் பெறுந்தொற்று பரவும் விகிதம் குறிப்பாக மாணவர்களிடையே பரவும் விகிதம் குறையும்.

மேலும் இச்செயல்பாடு குறித்து பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகரித்தல், பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் வாயிலாக விழிப்புணர்வு பெறும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்தல் வாயிலாக பள்ளிகள் பயனடையும்.

**நிதி ஒதுக்கீடு: (தொடக்க நிலை)**

| வ.எண் | செயல்பாடு | பள்ளி/ஆசிரியர்களின் எண்ணிக்கை | பள்ளி/ஆசிரியர் ஒருவருக்கு | நிதி ஒதுக்கீடு (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | பள்ளி பாதுகாப்பு சார்ந்து பள்ளிகளுக்கான நிதி. | 31,214 | 0.020 | 624.28 |
| 2. | பள்ளி பாதுகாப்பு சார்ந்து ஆசிரியர்களுக்கான பயிற்சி நிதி | 1,45,138 | 0.005 | 725.69 |
| **மொத்தம்** | | | | **1349.97** |

**நிதி ஒதுக்கீடு: (இடை நிலை)**

| வ.எண் | செயல்பாடு | பள்ளி/ஆசிரியர்களின் எண்ணிக்கை | பள்ளி/ஆசிரியர் ஒருவருக்கு | நிதி ஒதுக்கீடு (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | பள்ளி பாதுகாப்பு சார்ந்து பள்ளிகளுக்கான நிதி | 6177 | 0.020 | 123.54 |
| 2. | பள்ளி பாதுகாப்பு சார்ந்து ஆசிரியர்களுக்கான பயிற்சி நிதி | 79,677 | 0.005 | 398.385 |
| **மொத்தம்** | | | | **521.925** |

2021-22 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்திற்காக மொத்தம் ரூ.1871.895 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பயனாளிகள்:**

இத்திட்டத்தின் வாயிலாக **24,266** அரசு தொடக்கப் பள்ளிகள், **6948** அரசு நடுநிலைப் பள்ளிகள் மற்றும் **6177** அரசு உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களும் பயனடைவார்கள்.